# திக்கற்றவர்களாகவிடேன் - பாகம் 01

**நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்** (யோவான் 14:18)




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மேல் வீட்டறையிலே பஸ்கா பந்தி இருந்த பொழுது, தம்முடைய சீஷர்களை பார்த்து இவ்வாறாக கூறினார். மேலும் உங்களிடத்தில் திரும்பி வருவேன் எனவும் வாக்களித்தார். இது சீஷர்களுக்கு கூறப்பட்டிருந்தாலும், நம் ஒவ்வொருவருக்கும் இவ்வாக்குதத்தம் உரித்ததாகும்.

**உபாகமம் 10:18** கூறுகிறது, **"அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயஞ்செய்கிறவரும், அந்நியன்மேல் அன்புவைத்து அவனுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார்."** என்று. மேலும் **சங்கீதம் 10:14** கூறுகிறது, **"திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர் நீரே."** என்று. **சங்கீதம் 68:5** கூறுகிறது, **"தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்."**. ஆம், அவர் ஒருவரையும் திக்கற்றவர்களாய் விடுவதில்லை. இங்கு நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். திக்கற்றவர்கள் என்பது ஆதரவற்ற, அனாதை பிள்ளைகளை மட்டும் குறிப்பதில்லை. திக்கற்ற என்ற வார்த்தையானது, வழி எது என்று தெரியாமல், திக்கு திசை தெரியாமல், அடுத்து வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் என்று புரியாமல் இருப்பவரையும் குறிக்கும். மேலும் கொடூர வியாதி, எதிர்பாராத நிகழ்வுகளால் உண்டான கலக்கம், மேலும் பொல்லாத பிசாசினால், மற்ற மனிதர்களால் உண்டாகும்

வேதனையான சூழ்நிலைகளையும் குறிக்கும். வேதாகமத்தில் பல தேவபிள்ளைகள் பல்வேறு சூழ்நிலைகள் மத்தியில் திக்கற்றவர்களாய், கைவிடப்பட்டவர்களாய், உணரும் வேளையில் ஆண்டவர் அவர்கள் வாழ்க்கையில் இடைப்பட்டு அவர்கள் திக்கற்று போகாதபடி காத்ததை நாம் பின்வருமாறு தியானிக்கலாம்.

### 1. யோபு:

ஒரே நாளில் எல்லாவற்றையும் இழந்ததால் இருதயத்தில் உண்டான வேதனை மத்தியிலும், உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் உண்டாகிய கொடிய பருக்களால், சரீரத்தில் உண்டான வேதனை மத்தியிலும், தன் வேதனையை பகிர்ந்து கொள்ள வேண்டிய மனைவி, அவரை பார்த்து, **"நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்" (யோபு 2:9)** என்று கூறிய பொழுதிலும், தனக்கு ஆறுதல் சொல்வார்கள் என்று நினைத்த நண்பர்களும் அவரையே குற்றம் சாட்டின பொழுதிலும், அவர் அறிக்கை யிட்ட காரியங்கள் அற்புதமானவைகள் ஆகும்.

**யோபு 17:3** இல், **"தேவரீர் என் காரியத்தை மேல்போட்டுக்கொண்டு, எனக்காகப் பிணைப்படுவீராக; வேறே யார் எனக்குக் கைகொடுக்கத்தக்கவர்? "**, என்றும், **யோபு 23:10** இல், **"ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்."**, என்றும், **யோபு 13:15** இல், **"அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்."**. என்றும் அறிக்கையிடுகிறார். இவ்வாறாக எல்லாம் எதிர்மறையாக இருந்த நேரத்திலும், ஆண்டவரையே நம்பி இருந்த யோபுவை, ஆண்டவர் திக்கற்றவனாய் விடவில்லை. **யோபு 42:10** கூறுகிறது, **"யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்."**. இன்று நம்முடைய வாழ்க்கையிலும், நாம் எதிர்பாராத சூழ்நிலைகளை சந்திக்கிற பொழுதிலும், நமக்கு ஆறுதலாய், ஆதரவாய் இருப்பார்கள் என்று நினைத்தவர்களும், நம்மை விட்டு சென்றாலும், நாம் ஆண்டவரையே நம்பி இருப்போமானால், அவர் நம்மை ஒருபோதும் ஒரு நாளும் திக்கற்றவர்களாய் விடமாட்டார்.

## 2. யோசேப்பு:

**ஆதியாகமம் 37:3** கூறுகிறது, **"இஸ்ரவேலின் முதிர்வயதிலே யோசேப்புத் தனக்குப் பிறந்ததினால், இஸ்ரவேல் தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்குப் பலவருணமான அங்கியைச் செய்வித்தான்."**. ஆனால் இப்படிப்பட்ட யோசேப்பு தனக்கு சொப்பனத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தெய்வத்திட்டத்தை, அவன் தன் தகப்பனுக்கும் தன் மூத்த சகோதரர்களுக்கும் சொன்ன பொழுது, அதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. **ஆதியாகமம் 37:10,11** கூறுகிறது, **"இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் சொன்னபோது, அவன் தகப்பன் அவனைப் பார்த்து: நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்கவருவோமோ? என்று அவனைக் கடிந்துகொண்டான். அவன் சகோதரர் அவன்மேல் பொறாமைகொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான்."**. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு நாள், **"அவர்கள் அவனைத் தூரத்தில் வரக்கண்டு, அவன் தங்களுக்குச் சமீபமாய் வருமுன்னே, அவனைக் கொலைசெய்யும்படி சதியோசனைபண்ணி, ஒருவரை ஒருவர் நோக்கி: இதோ, சொப்பனக்காரன் வருகிறான், நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்." (ஆதியாகமம் 37:18-20)**. இங்கு அவனுடைய சொந்த சகோதரர்களே, அற்பமான காரியத்துக்காக அவனை கொல்ல துணிந்தனர். பின்பு, **"அப்பொழுது யூதா தன் சகோதரரை நோக்கி: நாம் நம்முடைய சகோதரனைக் கொன்று, அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம் என்ன? அவனை இந்த இஸ்மவேலருக்கு விற்றுப்போடுவோம் வாருங்கள்; நமது கை அவன்மேல் படாதிருப்பதாக; அவன் நம்முடைய சகோதரனும் நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறானே என்றான். அவன் சகோதரர் அவன் சொல்லுக்கு இணங்கினார்கள்." (ஆதியாகமம் 37:26,27)**. இவ்வாறாக யோசேப்பு எகிப்துக்கு கொண்டு போகப் பட்டான்.

**ஆதியாகமம் 39:2-6** வசனங்களில், **"கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான். கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு;**

**யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். அவனைத் தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கினதுமுதற்கொண்டு, கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது. ஆகையால், அவன் தனக்கு உண்டானதையெல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புக்கொடுத்துவிட்டு, தான் புசிக்கிற போஜனம்தவிர தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக்குறித்தும் விசாரியாதிருந்தான். யோசேப்பு அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்தான். “.** இங்கு அன்பான தகப்பனின் அரவணைப்பில் இருந்த யோசேப்பு, தற்பொழுது அடிமையாய் வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தபொழுதும், அங்கும் அவன் உண்மையுள்ளவனாய் இருந்தான். காரணம் ஆண்டவர் யோசேப்போடு இருந்தார். அவர் அவனை திக்கற்றவனாக விடவில்லை. எதிர்மறையான சூழ்நிலை மத்தியிலும், அவர் தன்னோடு இருந்து, திக்கற்ற பிள்ளையான தனக்கு, நல்ல தகப்பனாய் ஆண்டவர் இருப்பதை யோசேப்பு உணர்ந்தார்.

**“சிலநாள் சென்றபின், அவனுடைய எஜமானின் மனைவி யோசேப்பின்மேல் கண்போட்டு, என்னோடே சயனி என்றாள். அவனோ தன் எஜமானுடைய மனைவியின் சொல்லுக்கு இணங்காமல், அவளை நோக்கி: இதோ, வீட்டிலே என்னிடத்தில் இருக்கிறவைகளில் யாதொன்றைக்குறித்தும் என் ஆண்டவன் விசாரியாமல், தமக்கு உண்டான எல்லாவற்றையும் என் கையில் ஒப்பித்திருக்கிறார். இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்.“, (ஆதியாகமம் 39:7-9).** இப்படியாக ஆண்டவர் தன்னோடு இருக்கிறார், அவருக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்று உறுதியோடு இருந்த பொழுதும், அநியாயமாய், பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டு, **“யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்.“ (ஆதியாகமம் 39:20).** ஆனாலும், **“கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார்.**

**சிறைச்சாலைத் தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான்; அங்கே அவர்கள் செய்வதெல்லாவற்றையும் யோசேப்பு செய்வித்தான். கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும், அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும், அவன் வசமாயிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை." (ஆதியாகமம்** 39:21-23).

இவ்வாறாக சிறைச்சாலையில் இருக்கையில், **"காலமே யோசேப்பு அவர்களிடத்தில் போய், அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் கலங்கியிருந்தார்கள். அப்பொழுது அவன் தன் எஜமானுடைய வீட்டில் தன்னோடே காவல்பண்ணப்பட்டிருந்த பார்வோனுடைய பிரதானிகளை நோக்கி: உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: சொப்பனம் கண்டோம், அதற்கு அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனும் இல்லை என்றார்கள். அதற்கு யோசேப்பு: சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான்." (ஆதியாகமம்** 40:6-8). இங்கு சொப்பனத்திற்குரிய அர்த்தத்தை கூறி, **"இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான்." (ஆதியாகமம்** 40:14,15). இவ்வாறாக பான பாத்திரக்காரனிடம் தன் சூழ்நிலையை கூறின பொழுதிலும், **"பானபாத்திரக்காரரின் தலைவனைப் பானங்கொடுக்கிற தன் உத்தியோகத்திலே மறுபடியும் வைத்தான்; அந்தப்படியே அவன் பார்வோனுடைய கையிலே பாத்திரத்தைக் கொடுத்தான் (ஆதியாகமம்** 40:21). **"ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டான்." (ஆதியாகமம்** 40:23). இவ்வாறாக யோசேப்பின் வாழ்க்கை சூழ்நிலை மோசமாக போய்க் கொண்டிருந்தாலும், தனக்கு உதவி செய்ய தன் திக்கற்ற நிலையைக் காண, தன்னுடைய 17 ஆவது வயதிலிருந்து இப்பொழுது 30 ஆவது வயது வரையிலும், தன் இளமை முழுவதும், தன் வாழ்க்கை என்னவாகும் என்று தெரியாமல், திக்கற்றவனாய் அவன் இருந்த பொழுதிலும், ஆண்டவர் அவனோடு இருந்தார். அவன் மூலமாய் ஆண்டவருடைய திட்டங்கள் வெளிப்பட்டது. இறுதியில் ஆண்டவர் அவன் திக்கற்ற நிலையை ஒரே நாளில் மாற்றிப் போட்டார்.

“இரண்டு வருஷம் சென்றபின்பு, பார்வோன் ஒரு சொப்பனம் கண்டான்; அது என்னவென்றால், அவன் நதியண்டையிலே நின்றுகொண்டிருந்தான்.“ (ஆதியாகமம் 41:1). “காலமே பார்வோனுடைய மனம் கலக்கங்கொண்டிருந்தது; அப்பொழுது அவன் எகிப்திலுள்ள சகல மந்திரவாதிகளையும் சகல சாஸ்திரிகளையும் அழைப்பித்து, அவர்களுக்குத் தன் சொப்பனத்தைச் சொன்னான்; ஒருவராலும் அதின் அர்த்தத்தைப் பார்வோனுக்குச் சொல்லக்கூடாமற்போயிற்று. அப்பொழுது பானபாத்திரக்காரரின் தலைவன் பார்வோனை நோக்கி: நான் செய்த குற்றம் இன்றுதான் என் நினைவில் வந்தது. பார்வோன் தம்முடைய ஊழியக்காரர்மேல் கடுங்கோபங்கொண்டு, என்னையும் சுயம்பாகிகளின் தலைவனையும் தலையாரிகளின் அதிபதி வீடாகிய சிறைச்சாலையிலே வைத்திருந்த காலத்தில், நானும் அவனும் ஒரே ராத்திரியிலே வெவ்வேறு பொருள்கொண்ட சொப்பனம் கண்டோம். அப்பொழுது தலையாரிகளின் அதிபதிக்கு வேலைக்காரனாகிய எபிரெய பிள்ளையாண்டான் ஒருவன் அங்கே எங்களோடே இருந்தான்; அவனிடத்தில் அவைகளைச் சொன்னோம், அவன் நாங்கள் கண்ட சொப்பனங்களுக்குரிய வெவ்வேறு அர்த்தத்தின்படியே எங்கள் சொப்பனத்தின் பயனைச் சொன்னான். அவன் எங்களுக்குச் சொல்லிய அர்த்தத்தின்படியே நடந்தது; என்னைத் திரும்ப என் நிலையிலே நிறுத்தி, அவனைத் தூக்கிப்போடுவித்தார் என்றான். அப்பொழுது பார்வோன் யோசேப்பை அழைப்பித்தான்; அவனைத் தீவிரமாய்க் காவல்கிடங்கிலிருந்து கொண்டுவந்தார்கள். அவன் சவரம்பண்ணிக்கொண்டு, வேறு வஸ்திரம் தரித்து, பார்வோனிடத்தில் வந்தான். பார்வோன் யோசேப்பை நோக்கி: ஒரு சொப்பனம் கண்டேன்; அதின் அர்த்தத்தைச் சொல்ல ஒருவரும் இல்லை; நீ ஒரு சொப்பனத்தைக் கேட்டால், அதின் அர்த்தத்தைச் சொல்லுவாய் என்று உன்னைக்குறித்து நான் கேள்விப்பட்டேன் என்றான். அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்தரமாக: நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார் என்றான்.“ (ஆதியாகமம் 41:8-16). இங்கு காரியங்கள் எல்லாம் மிக வேகமாக மாறுவதை நாம் காணலாம். ஒருபுறம் சொப்பனத்தைப் பற்றிய பார்வோனின் கலக்கம், மறுபுறம் பான பாத்திரக்காரன் யோசேப்பை குறித்து கூறுதல், உடனே காவல் கிடங்கில் கிடந்த அவன் பார்வோனுக்கு முன்பாக அவனுக்கு உத்தரவு சொல்ல நிற்கிறான்.

பார்வோனுக்கு சொப்பனத்தின் அர்த்தத்தை கூறிய யோசேப்பு, மேலும், “இந்தக் காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், தேவன் இதைச் சீக்கிரத்தில் செய்வார் என்பதையும் குறிக்கும்பொருட்டு,

**இந்தச் சொப்பனம் பார்வோனுக்கு இரட்டித்தது. ஆகையால், விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத் தேடி, அவனை எகிப்துதேசத்துக்கு அதிகாரியாகப் பார்வோன் ஏற்படுத்துவாராக." (ஆதியாகமம் 41:32,33)** என்றான். இங்கு யோசேப்பு எகிப்து தேசத்திற்கு ஆண்டவர் சீக்கிரமாய் செய்யப்போகிறதை பார்வோனுக்கு கூறினான். ஆனால் ஆண்டவர் தன் வாழ்வில் சீக்கிரமாய் செய்யப் போகிறதை, தான் வாய்மொழி வாயிலாகவே அறிக்கையிட்டதை அறியாதிருந்தான்.

**"இந்த வார்த்தை பார்வோனுடைய பார்வைக்கும் அவன் ஊழியக்காரர் எல்லாருடைய பார்வைக்கும் நன்றாய்க் கண்டது. அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான். பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை. நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில்மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான். பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து, தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்; பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: நான் பார்வோன்; ஆனாலும் எகிப்துதேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லாமல் தன் கையையாவது தன் காலையாவது அசைக்கக்கூடாது என்றான்." (ஆதியாகமம் 41:37-44).** தனக்கு தேவன் வெளிப்படுத்தின சொப்பனத்தின் அர்த்தத்தை பிறருக்கு கூறி அவர்களை பிரமிக்க பண்ணிய யோசேப்பிற்கு, ஆண்டவர் தன் வாழ்வில் தனக்கு கொடுத்த சொப்பனத்தை நிறைவேற்ற, தன் வாழ்க்கையின் கொடிய சூழ்நிலையை, திக்கற்ற நிலைமையை சில மணித்துளிகளில் மாற்றினதை கண்ட பொழுது, யோசேப்பு நிச்சயமாக பிரமித்து போயிருப்பான். ஆம் ஆண்டவர் யோசேப்பை திக்கற்றவனாய் விடவில்லை. **"யோசேப்பு அத்தேசத்துக்கு அதிபதியாயிருந்து, தேசத்தின் ஜனங்கள் யாவருக்கும் விற்றான். யோசேப்பின் சகோதரர் வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள். யோசேப்பு அவர்களைப் பார்த்து,**

தன் சகோதரர் என்று அறிந்துகொண்டான்; அறிந்தும் அறியாதவன்போலக் கடினமாய் அவர்களோடே பேசி: நீங்கள் எங்கேயிருந்து வந்தீர்கள் என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: கானான் தேசத்திலிருந்து தானியம் கொள்ள வந்தோம் என்றார்கள். யோசேப்பு அவர்களைத் தன் சகோதரர் என்று அறிந்தும், அவர்கள் அவனை அறியவில்லை. யோசேப்பு அவர்களைக்குறித்துத் தான் கண்ட சொப்பனங்களை நினைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் வேவுகாரர், தேசம் எங்கே திறந்துகிடக்கிறது என்று பார்க்க வந்தீர்கள் என்றான்." (ஆதியாகமம் 42:6-9). இங்கு இறுதியில் ஆண்டவர் யோசேப்பைக் குறித்த சொப்பனத்தை நிறைவேற செய்தார். அவன் இந்த சொப்பனத்தை கூறியதால்தான் அவனுக்கு இத்தனை துன்பங்களும் உண்டாகின. ஆனால் ஆண்டவரோ அவனைக் கொண்டு என்ன திட்டம் வைத்திருந்தாரோ அதை நிறைவேற்றி முடிக்க அவனோடு இருந்தார். மற்ற எல்லாரும் அவனை கைவிட்ட பொழுதும், ஆண்டவர் அவனுக்கு திக்கற்றவனாய் விடவில்லை. இதை யோசேப்பு உணர்ந்து கொண்டான். இதனால் தான், "அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: என் கிட்ட வாருங்கள் என்றான். அவர்கள் கிட்டப்போனார்கள்; அப்பொழுது அவன்: நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான். என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். " (ஆதியாகமம் 45:4,5). என்றான். உண்மையில் தேவன் தன்னை ஒருபோதும் திக்கற்றவனாக விடவில்லை, அவருடைய திட்டத்தையே தன்னில் நிறைவேற்றினார் என்பதையும் உணர்ந்து கொண்டான்.

அதனால் தான் பல வருடங்களுக்கு பின்பும், யாக்கோபு மரித்த பிறகும், "தங்கள் தகப்பன் மரணமடைந்ததை யோசேப்பின் சகோதரர் கண்டு: ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து, நாம் அவனுக்குச் செய்த எல்லாப் பொல்லாங்குக்காகவும் நமக்குச் சரிக்குச் சரிகட்டுவான் என்று சொல்லி, யோசேப்பினிடத்தில் ஆள் அனுப்பி, உம்முடைய சகோதரர் உமக்குப் பொல்லாங்கு செய்திருந்தாலும், அவர்கள் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் நீர் தயவுசெய்து மன்னிக்கவேண்டும் என்று உம்முடைய தகப்பனார் மரணமடையுமுன்னே, உமக்குச் சொல்லும்படி கட்டளையிட்டார். ஆகையால், உம்முடைய தகப்பனாருடைய தேவனுக்கு ஊழியக்காரராகிய நாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்கவேண்டும் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னார்கள். அவர்கள் அதை யோசேப்புக்குச்

**சொன்னபோது, அவன் அழுதான். பின்பு, அவனுடைய சகோதரரும் போய், அவனுக்கு முன்பாகத் தாழ விழுந்து: இதோ, நாங்கள் உமக்கு அடிமைகள் என்றார்கள். யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.“ (ஆதியாகமம் 50:15-21)**. இங்கு நாம் காணும் பொழுது, தேவனுடன் ஐக்கியம் இல்லாத யோசேப்பின் சகோதரர் தங்களுடைய சூழ்நிலை நன்றாக இருந்தாலும், தாங்கள் செய்த பாவத்திற்காக, துரோகத்திற்காக தண்டிக்கப்படுவோமோ என்ற பயத்துடனே வாழ்ந்தனர். ஆனால் யோசேப்பிற்கோ, தன்னை ஆண்டவர் எச்சூழ்நிலையிலும் கைவிடவில்லை, தன்னை திக்கற்றவனாய் விடவில்லை என்று அறிந்திருந்தபடியால், தெய்வத்திட்டத்தை அவர் சரியாக உணர்ந்து கொண்டார்.

மேலும், **“யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: நான் மரணமடையப்போகிறேன்; ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தைவிட்டு, தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக்கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்பண்ணுவார் என்று சொன்னதுமன்றி; தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக என்றும் சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக்கொண்டான். யோசேப்பு நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரித்தான். அவனுக்குச் சுகந்தவர்க்கமிட்டு, எகிப்து தேசத்தில் அவனை ஒரு பெட்டியிலே வைத்துவைத்தார்கள். “ (ஆதியாகமம் 50:24-26)**. இங்கு ஆண்டவர் தன்னை மட்டுமல்ல, முழு இஸ்ரவேல் வம்சத்தையும் திக்கற்றவர்களாய் விடாமல், எப்படி சொப்பனத்தின் மூலம் வெளிப்படுத்தின தன் வாழ்க்கையின் காரியங்களை ஆண்டவர் நிறைவேற்றினாரோ, அவ்வாறே ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆண்டவர் சொன்ன வாக்குத்த பூமிக்கு அழைத்துச் செல்வார் என்பதையும், அவர்களை திக்கற்றவர்களாய் விடமாட்டார் என்பதையும் கூறுகிறார். இதனை **எபிரெயர் 11: 22** இல் **“விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்.“**. ஆம் யோபுவின் வாழ்விலும், யோசேப்பின்

வாழ்விலும் அவர்களுடைய வாழ்க்கை சூழ்நிலைகள் தலைகீழாய் மாறின பொழுதும், அவர்களை எல்லாரும் கைவிட்ட பொழுதும், குற்றம் சாட்டின பொழுதும், ஆவியிலும் ஆத்துமாவிலும், சரீரத்திலும் வேதனை அனுபவித்த பொழுதும், ஆண்டவரையே விசுவாசித்து, சார்ந்து வாழ்ந்த இவ்விருவரையும் ஆண்டவர் திக்கற்றவர்களாய் விடவில்லை. இன்று நம்மையும் ஆண்டவர் இவ்வாறாக காக்க வல்லவராய் இருக்கிறார். எனவே நாம் வாழ்கிற இக்காலம், கொடியதாய் இருந்தாலும், தேவ பயம், பரிசுத்த வாழ்வு போன்றவற்றை பற்றி ஒருவரும் கவலைப்படாமல் இஷ்டப்படி வாழ்ந்தாலும், சமாதானம் சமாதானம், என்று கூறி கொடிய சண்டைகளை தேசங்கள் உருவாக்கினாலும், ஆண்டவரை மாத்திரம் சார்ந்து வாழ்வோரை ஆண்டவர் ஒருபோதும் திக்கற்றவர்களாக விடமாட்டார். தொடர்ந்து தியானிப்போம். ஆமென், அல்லேலூயா.